# காலாண்டுத் தேர்வு

## மகிழ்ச்சி - ஆறாம் வகுப்பு

மதிப்பெண்கள் : 100 காலம் : 3 மணி

---

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக.** **5 x 1 = 5**

1. சிலப்பதிகாரத்தை இயற்றியவர் ______________.
2. தமிழ் மொழியில் இலக்கணம் ______________ வகைப்படும்.
3. இந்தியாவில் நூலகச் சட்டம் கொண்டுவரப்பட்ட ஆண்டு ___.
4. அளபெடை ______________ வகைப்படும்.
5. சிறுதானியங்களில் முதன்மையானது ______________.

**II. பொருள் எழுதுக.** **5 x 1 = 5**

1. கனி – ______________________
2. விச்சை – ______________________
3. அரண் – ______________________
4. நுண் – ______________________
5. பேதமை – ______________________

**III. பிரித்து எழுதுக.** **5 x 1 = 5**

1. செந்நெல் – ______________________
2. சரியில்லை – ______________________
3. அறிவிலார் – ______________________
4. நன்றியுணர்வு – ______________________
5. அகனமர்ந்து – ______________________

**IV. சேர்த்து எழுதுக .** **5 x 1 = 5**

1. உடல் + நிலை = ______________________

2. ஆடு + குட்டி = ____________________

3. அடை + பட்டு = ____________________

4. வீண் + அடி = ____________________

5. பொறுமை + இழந்த = ____________________

**V. எதிர்ச்சொல் எழுதுக. 5 x 1 = 5**

1. இன்பம் x ________________
2. காலை x ________________
3. இம்மை x ________________
4. இயற்கை x ________________
5. சிரிப்பு x ________________

**VI. பொருத்துக. 5 x 1 = 5**

| | | |
|---|---|---|
| 1. | புகார்க் காண்டம் | சீத்தலைச் சாத்தனார் |
| 2. | கண்ணகி | போட்லியன் |
| 3. | நன்னூற் புலவன் | 10 காதைகள் |
| 4. | உலகின் மிகப்பெரிய நூலகம் | நவம்பர் |
| 5. | தேசிய நூலக வாரவிழா | மாணிக்கப் பரல்கள் |

**VII. சிறுவினாக்களுக்கு விடையளி. (ஏதேனும் பத்திற்கு மட்டும்) 10 x 3 = 30**

1. “இனியன” என்று பாரதிதாசன் குறிப்பிடுவன யாவை?
2. ஓரெழுத்து ஒரு மொழியாவன எவை?
3. ஐம்பெருங்காப்பியங்கள் யாவை?
4. சிலப்பதிகாரம் உணர்த்தும் மூன்று உண்மைகள் யாவை?
5. தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
6. வீணான சலசலப்பு என ‘நாலடியார்’ கூறுவது எதனை?
7. பகைவரால் அழிக்க முடியாத அரண் எது?
8. நூலகத்தின் வகைகள் யாவை?
9. அளபெடை என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
10. அரசன் மலைவளம் கண்டு வருகையில் என்ன நிகழ்ந்தது?
11. யாருடைய வாழ்வு கெட்டுப் போகாது?
12. சிறுதானியங்களின் பெயர்களை எழுதுக.
13. சுட்டுத் திரிபை சான்றுடன் விளக்குக.
14. ஆறு எதைப் போல நெளிந்து ஓடும்?

**VIII. பெருவினாக்களுக்கு விடையளி. (ஏதேனும் ஐந்திற்கு மட்டும்) 5 x 6 = 30**

1. சிலப்பதிகாரத்தின் காப்பிய அமைப்பை விவரி.
2. வல்லின, மெல்லின மற்றும் இடையின எழுத்துகளைப் பட்டியலிடுக.
3. நாலடியார் – சிறு குறிப்பு எழுதுக.
4. பின்வரும் குறட்பாக்களை அடி பிறழாமல் எழுதுக.

   அ. “அஞ்சுவ தஞ்சாமை” எனத் தொடங்கும் குறள்.
   ஆ. “குழையும் விருந்து” என முடியும் குறள்.
5. நூலகத்தின் அமைப்பை விவரி.
6. குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா இயற்றிய நூல்களின் பெயர்களை எழுதுக.
7. சிறுதானியங்கள் – குறிப்பு வரைக.

**IX. கடிதம் எழுதுதல். (ஏதேனும் ஒன்று மட்டும்) 1 x 10 = 10**

1. நூலகம் வேண்டிக் கூட்டு விண்ணப்பக் கடிதம் எழுதுக.
2. உனது ஊரில் நடைபெறவுள்ள திருவிழாவைக் காண வருமாறு நண்பனுக்கு கடிதம் எழுதுக.